DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 33/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : மாரித்துரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th February 2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வடக்குபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள். நிகழ்நிலை புகார்தாரர் உத்தண்டகைாளையை தெரியும். உத்தண்டகாளையும் எனது ஊரை சேர்ந்தவர். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**நீதிமன்ற விசாரணை**

01.09.2015ம் தேதி இரவு சுமார் 7.15 மணியளவில் நான் எங்க ஊர் மெயின்ரோட்டில் தென்புறம் அமைந்துள்ள புதிய தமிழகம் கட்சி கொடிக்கம்பம் அருகே நின்றுபேசிக்கொண்டிருந்தபோது எங்க ஊரை சேர்ந்த உத்தண்டகாளை என்பவரும் அருகே நின்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது அங்கு வந்த

அவரது மாமா மகன் சுந்தரலிங்கம் மற்றும் அவரது மனைவி முருகலட்சுமி இருவரும் உத்தண்டகாளையை அசிங்கமான வார்த்தைகளால் ஏசினார்கள் என்றும், எதிரி சுந்தரலிங்கம் கையில் வைத்திருந்த அரிவாளால் உத்தண்டகாளையின் இடது கை முட்டிக்கு கீழ் வெட்டி லேசான ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், எதிரி சுந்தரலிங்கம் உத்தண்டகாளைக்கு கொலைமிரட்டடல் விடுத்தார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 33/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : மாடசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th February 2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது வடக்குபுதுாரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை எங்கு எதற்காக எப்போது போட்டேன் என்ற விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரமும் எனக்கு ஞாபகம் இல்லை. **பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற விசாரணை**

01.09.2015ம் தேதி இரவு சுமார் 11 மணியளவில் நான் எங்க ஊர் புதிய தமிழகம் கொடிக்கம்பம் பக்கம் நின்றபோது அங்கு வந்த சங்கரன்கோவில்

தாலுகா உதவிஆய்வாளர் அந்த காவல்நிலையக்குற்ற எண்.114/2015 ச/பி.294(பி), 324, 506(2) இதச வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் என் முன்புக்கும், கணேசன் என்பவர் முன்புக்கும் சர்ச் லைட் மற்றும் டார்ச் லைட் வெளிச்சத்திலும், தெருவிளக்கு வெளிச்சத்திலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அதில் நானும், கணேசனும் கையொப்பம் செய்ததாக தபோலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**